663

[வெளி]யீடு : ஆண்டு : 8

திருவள்ளுவர்

# புகழ்ப் பூந்துணர்

[illegible] 1950
MADRAS

வெளியிடுவோர் :

திரு. சா. ஜானகிராம் பிள்ளை
(புலியூர் சுரோத்திரியதார், சென்னை)

சென்னைத் திருவள்ளுவர் கழகம்
சென்னை - 7

விலை ០-1-0

6-8-1950

திருவள்ளுவர் துணை

# திருக்குறள் இசைப் பாக்கள்

1. தெள்ளிய செந்தமிழ் போல்மொழி உண்டோ
திருக்குறள் போலும்நூல் வேறெங்கும் உண்டோ
உள்ளது மெய்ப்புகழ் செந்தமிழ்க் கென்னில்
உயர்தனித் திருக்குறள் உடையதென் பதுவே.
வள்ளுவ னேநிகர் புலமைஉள் ளோர்கள்
மாநில மீதினில் வேறினி யாரே
வள்ளல்நம் பெரியவன் மலரடி வாழ்த்தி
மனமகிழ் வுறச்செய்வோம் திருக்குறள் போற்றி.

2. நறவெனச் சுவைதரும் தமிழ்த்திரு மொழியில்
நானிலத் தியாவரும் நயப்புறும் வழியில்
அறமெனப் பொருளென இன்பெனப் பகுத்தான்
அலைகடல் உலகியல் அனைத்தையும் வகுத்தான்
உறவெனக் குருவென உறுதுணை யெனவே
உடனமர்ந் தெடுத்துரைத் துறுதிகள் தரும்நூல்
துறுமிய சொற்பொருள் வளக்கடல் குளித்தோன்
தூயவோர் காவியம் வாய்மையின் அளித்தோன்.

3. விண்ணக மதிப்பெறும் பரப்பினை அறிந்தும்
விளங்கிழை யவர்முகத் துவமைசொன் னாற்போல்
மண்ணகத் தியல்பெலாம் அளந்தகத் தடக்கி
மாண்புல மைக்கெலாம் தான்வரம் பாகி
நுண்ணிய போறி வெனும்அலை புரளும்
நுனித்தநல் லுணர்வெனும் பனிப்பெருங் கடலைத்
திண்ணிய அறிவெனும் வயிரத்தின் வாளைத்
திருக்குறள் எனப்பெயர் பொறித்தனர் மேனாள்.

4. தண்டமிழ் நாட்டவர் யாவரும் வம்மின்
தனித்தனித் திருக்குறள் மனத்துறச் செய்ம்மின்
மண்டுநல் அறிவெனும் பெருங்கடல் ஊறும்
மணற்செழுங் கேணிஇங் கிஃதெனல் தேறும்
கண்டதும் கேட்டதும் இலைஇது போலே
காசினி மீதினில் வேறொரு நூலே
தண்டமிழ்த் தாய்த்திரு மலரடி போற்றி
தமிழ்ப்பெரி யோன்அவன் துணைமலர் போற்றி.

—வித்துவான் திரு. முருக. இலக்குவனார்

## 2. வள்ளுவர் வேதம்

### ஆனந்தக் களிப்பு—மெட்டு

1. வள்ளுவர் செந்தமிழ் வேதம்—அது
மானிடர்க் கெல்லாம் பொதுமறை யாகும்
உள்ளத்தில் ஒன்றி யெல்லாரும்—இதை
ஓதி ஒருகுல மாகநாம் வாழ்வோம். (வள்ளு)

2. சாதிமத பேத மில்லை—தூய
சன்மார்க்க சாதனம் சாற்றுங் குறளை
மேதினி யெல்லாம் பயின்றால்—மிக
மேன்மையாய் வாழலாம் மானிட ரெல்லாம். (வள்ளு)

3. அன்பும் அறமும் பொருளும்—வீர
ஆற்றலும் காதலும் போற்றிப் பொலியும்
இன்பத்திலே இருபாலார்—கூடி
இல்லறம் செய்திட நல்வழி காட்டும். (வள்ளு)

4. ஒப்புயர்வற்ற தமிழர்—பெற்ற
ஒப்புயர்வற்ற உயர்பெரும் வேதம்
முப்பாலை அள்ளிக் குடிப்போம்—எங்கள்
முத்தமிழுக்கு ஜெயமுரசடிப்போம் (வள்ளு)

—சுவாமி சுத்தானந்த பாரதியார்

## 3. தெய்வத் திருமறை

1. தெய்வத் திருமறை தமிழா—நம்
தேவர் திருக்குறள் என்போம் !
உய்வதற் கிதைவிட ஒருநூல்—இவ்
வுலகினில் வேறிலை உணர்வாய் !

2. கடவுளை நம்பிடச் சொல்லும் ;—நல்
கல்வியைக் கண்ணெனச் சொல்லும் ;
திடமுடன் இல்லற மதனை—நீ
தேடியே வாழ்ந்திடச் சொல்லும்.

3. வாழ்க்கைத் துணைவியே மனைவி ;—இன்ப
வாழ்வும் அளிப்பவள் மனைவி ;
ஆழ்கடல் உலகினில் அன்பாய்—நீ
அவளுடன் வாழ்எனச் சொல்லும்.

4. துறவிக்கு அருளுடன் உண்மை—மனத்
தூய்மையும் வேண்டுமென்று சொல்லும் ;
புறத்தினில் வேடங்கள் எல்லாம்—வெறும்
போலித் துறவென்றே சொல்லும்.

5. அறிவுடை நண்பரை உலகில்—நீ
ஆராய்ந்து கொள்ளெனச் சொல்லும் ;
வறியதோர் நிலையினும் உலகில்—நீ
மானமாய் வாழ்ந்திடச் சொல்லும்.

6. பொருளினைத் தேடியே நீயும்—அதைப்
போற்றியே வாழெனச் சொல்லும்.
வரும்படிக் கேற்பவே நின்று—நல்
வாழ்வை நடத்தெனச் சொல்லும்.

7. அளவறிந் துண்டிடல் என்றும்—நின்
ஆயுட்கு வழியெனச் சொல்லும்;
வளமுற உடலினைப் போற்றி—நீ
வளர்க்கவும் வழிமிகச் சொல்லும்.

8. இத்தனை நல்வழி சொல்லும்;—அதை
யாவரும் ஒப்பவே சொல்லும்;
இத்தரை மீதினில் இதுவே—இனி
யாவர்க்கும் பொதுமறை யாகும்.

9. தமிழர் பொதுமறை தமிழா—நம்
தண்டமிழ்த் திருக்குறள் அறிவாய்!
அமிழ்தினும் இனியவிக் குறளை—நாளும்
ஆழ்ந்துநீ ஓதியே வாழி!

—தமிழ்ப்புலவர் அ. கி. பரந்தாமனார், M.A.,
தலைவர், சென்னைத் திருவள்ளுவர் கழகம், சென்னை.

## 4. சாந்தனையும் குறளைப் படி

1. எங்கள் குறளுக் கிணையான வேறொரு நூல்
எங்குள தென்றுநீ
சொல் சொல் சொல் கிளியே

பொங்கும் அறமும் நல்ல பொருளும் அதனிடையே
பொலிந்து விளங்குதென்று
சொல் சொல் சொல் கிளியே. (எங்)

2. இன்ப நிலையின் தன்மை எங்கும் பரிமளிக்க
எழுந்தபொன் மறைஎன்று
சொல் சொல் சொல் கிளியே

துன்ப நிலையைக் கண்டு துவளாமல் நகுவென்று
தூண்டும்எம் மறையெனச்
சொல் சொல் சொல் கிளியே. (எங்)

3. கல்வியே கண் ணென்று கண்ணிய மாகநின்று
கருத்தி லமைப்பதெனச்
சொல் சொல் சொல் கிளியே

புல்லறி வாண்மையைப் போக்கிடவே பல்கால்
புகலுவ தென்றுநீ
சொல் சொல் சொல் கிளியே. (எங்)

4. தோன்றில் புகழுடனே தோன்றுக அன்றேல் இனித்
தோன்றாமை நன்றெனச்
சொல் சொல் சொல் கிளியே

ஈன்ருள் பசி காண்பினும் சான்ருேர் பழிக்கும்வினை
ஏற்பது தீமைஎன்று
சொல் சொல் சொல் கிளியே. (எங்)

5. அன்பும் அறவழியில் நின்ற இல் வாழ்க்கையதே
இன்பம் தருவதென்று
சொல் சொல் சொல் கிளியே

இன்சொல் இனிமையினைக் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்குவது
சொல் சொல் சொல் கிளியே. (எங்)

6. எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டு உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ருர்க்கெனச்
சொல் சொல் சொல் கிளியே

நன்றி மறத்த தென்றும் நன்றல்ல தென்றுசொன்னல்
என்றினிச் சொல்வதென்று
சொல் சொல் சொல் கிளியே. (எங்)

7. ஆதலின் குறளை ஆய்ந்து ஆய்ந்து கற்பது
ஆன்ற பெருமையெனச்
சொல் சொல் சொல் கிளியே

வேதனை ஏனேஇனி வேறு நூலைப்படித்துச்
சாந்தனையுங் கல்லனச்
சொல் சொல் சொல் கிளியே. (எங்)

—கூ. கி. ஜானகிராமன்

600 0

## 5. திருக்குறட் குயிற் கண்ணி

1. சீர்த்தி விளங்குந்தெய்வத் திருவள்ளுவர் மொழிந்த
வார்த்தை சிறந்ததடி—குயிலே
மண்டலத் துள்ளவர்க்கே.

2. மக்கட் பிறவிகொண்டோர் மாண்பை யடைவதற்குப்
பக்கத் துணையாமடி—குயிலே
பகருந் திருக்குறளே.

3. அறம்பொருளின்பமென்னு மரும்பொருள் மூன்றினையும்
திறம்பட ஓதுமடி—குயிலே
திகழுந் திருக்குறளே.

4. இல்லற வாழ்க்கைதனை யின்ப மொடு நடத்த
நல்லவழி யுரைக்கும்—குயிலே
நமது திருக்குறளே.

5. மருத்துவத் தொழிலோர்க்கும் வாணிபஞ் செய்பவர்க்கும்
கருத்துள் விளக்கொளியாம்—குயிலே
கவின்கொள் திருக்குறளே.

6. நிற்கத் தகுந்தநிலை நீதி யதுபோல் யாரும்
கற்கத் தகும்பனுவல்—குயிலே
கடவுள் திருக்குறளே.

7. ஒழுக்கமே யாவருக்கும் உயிரிற் சிறந்ததென்ற
விழுப்பம் புகன்றதடி—குயிலே
மெய்ம்மைத் திருக்குறளே.

8. தந்தை மகற்குதவுந் தன்மை யுரைத்தும் அந்த
மைந்தன் நெறிபுகலும்—குயிலே
வண்மைத் திருக்குறளே.

9. நிலையாத இவ்வுலகில் நிலைத்த புகழை யெல்லாம்
சிலைமே லெழுத்தெனவே—குயிலே
செப்பும் திருக்குறளே.

10. நண்பு பகைநொதுமல் நாடாமலே யெவர்க்கும்
பண்பொடு நீதிநெறி—குயிலே
பகருந் திருக்குறளே.

11. வாழ்க தமிழ்மொழிந்த வள்ளுவன் பொன்னடிகள்
வாழ்க எல்லாநிலத்தும்—குயிலே
வாய்மைத் திருக்குறளே.

—தமிழாசிரியர் அ. கணபதி அய்யா
தேவக்கோட்டை.

o

## 6. தமிழ் மறையும் தமிழன் கடமையும்

"பூமியில் மானிட ஜென்மம்"—என்னும் மெட்டு

1. தேவர் வள்ளுவர்செய் தெய்வத் திருமறை
தேய மனைத்திற்கும் பொதுமறையாம்—அதை
யாவரும் ஓதி யுணர்ந்து நடந்திட
ஏற்றது வேறில்லை போற்றுவமே. (தேவர்)

2. புலவரெல் லாம்புகழ் புண்ணியராம் தேவர்
பொதுமறை செய்திட்ட கண்ணியராம்—அவர்
பலவித மாயின சாத்திரத்தின் பொருள்
பாவிற் பொலிவித்த பாவலராம். (தேவர்)

3. இம்மை மறுமைப் பயனை யடைந்திட
ஏற்ற நெறிதனைச் சாற்றிடுமே—அந்தச்
செம்மை அறம்ஒளிர் தேவர் குறள்தன்னைச்
செகமெங்கும் பரவிடச் செய்திடுவோம். (தேவர்)

—ஆதி. தேவநாதன்

# 7. பெருமைகொள் தமிழா !

**இராகம் - செஞ்சுருட்டி** **தாளம் - ஆதி**

பல்லவி

பெருமை கொள்வாய் தமிழா !—தமிழ் நாட்டில்
பிறந்ததனுல் மிகச் சிறந்தவன் நானென்று (பெ)

அநுபல்லவி

அருமை மிகும் தமிழ் அமுத மொழியுனதே
ஆதலினு லிந்தப் பூதல மீது நீ (பெ)

சரணங்கள்

1. சிற்பக் கலைகளிலே சிறந்த துன்னுடு
சித்திரக் கலைத்திறம் செழித்த துன்னுடு
கற்பனைக் காவியம் கவிதைக ளெனும்உயர்
கலையின் நலங்களெல்லாம் கண்ட துன்னுடு (பெ)

2. ஆற்றுநீர் வளங்கள் அமைந்த துன்னுடு
அமுதக் கனிச்சோலைகள் நிறைந்த துன்னுடு
மாற்றுயர் பொன் நவமணி விளையும் நாடு
மலைவளம் பயிர்வளம் மலிந்த துன்னுடு (பெ)

3. முப்பெரும் தமிழ்மன்னர் இப்புவி யெல்லாம்
முறைதவரு தரசு செலுத்துவ துன்னுடு
ஒப்பரும் புலவர்கள் உதித்த துன்னுடு
ஓதவொண்ணு துன்தமிழ் நாட்டிற்கு ஈடு (பெ)

—கு. சா. கிருஷ்ணமூர்த்தி

## 8

பல்லவி

பாலொடு தேன்பழம் யாவும் கசந்திடும்
பைந்தமிழ் நந்தமிழ் பழைய செழுந்தமிழ் (பா)

அநுபல்லவி

கோலக் குழலிசைபூஞ் சோலைக் கிளிமழலை
நீலக் குயிலினிமை போலு மினிய மொழி (பா)

சரணங்கள்

1. சங்கம் வளர்த்ததமிழ் தங்கும் இனிமையுடன்
எங்கும் நிறைந்தபுகழ் இறைமை வளர்த்ததமிழ்
வங்கம் கடந்திமயம் வானுற வோங்கவொரு
தங்கக் கொடியையிட்டுத் தலைநிமிர் தங்கத்தமிழ் (பா)

2. சொன்னயம் செம்பொருள் பன்னலம் பெருகும்
சுருதிமெய்த் திருக்குற ளதனைப்பல் புலவோர்
பன்மொழிப் பெயர்த்துப் பயன்பெறு மாண்பு
பைந்தமிழ் ஒன்றே படைத்தது காணீர் (பா)

—முருக. விசாகநம்பி

## *வள்ளுவர் வாழ்க!*

வாழிய வாழிய வண்டமிழ் வாழ்க
வாழிய வாழிய தமிழகம் வாழ்க
வாழிய வாழிய வையமும் வாழ்க
வாழிய வாழிய வள்ளுவர் வாழியவே !

கிடைக்கும் இடம் :

சே. சுந்தரன்,
செயலாளர், சென்னைத் திருவள்ளுவர் கழகம்,
19, வெங்கடாசல முதலி தெரு,
சென்னை—7

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை — 14